www.padippakam.com

# ஏழைதாசன்

## உலகத் தமிழர்களின் ஒப்பற்ற குரல்

✿ சனவரி – 2006 ✿ இதழ் எண் : 131 ✿ விலை ரூ. 5/–

கொடூரமான அலைகரங்களுக்கு
பெற்ற உயிர்களை பலிகொடுத்து
பரிதவிக்கும் எம் குடும்ப உறவுகளுக்கு
கனத்த நெஞ்சங்களின்
கண்ணீர் அஞ்சலி...



இலக்கிய வேள்வி நடத்தும் ஏழைதாசனுக்கு உறுப்பினர் கட்டணமே உயிர்மூச்சு. ரூ. 60/- பணவிடை அனுப்பி உதவுங்களேன் !

இலங்கையின் தடைசெய்யப்பட்ட சஞ்சிகையாளர் !
அய்ரோப்பாவின் முதலாவது தமிழ்ப் பத்திரிகையாளர் !

படிப்பகம்

www.padippakam.com



# மணமங்கலம்  அழைப்பு

*மங்கலம் என்ப மனைமாட்சி மற்று அதன் நன்கலம் நன்மக்கட் பேறு*

*தமிழ்மறை அதி:6 குறள் 60*

தமிழ்த்திரு / நிறைமலி : ........................................ அவர்களுக்கு,
செந்தமிழ்ச் சான்றீர், வணக்கம்.

மலர்ந்தொளிரும் திருவள்ளுவர்த் தமிழாண்டு 2037 சுறவத் திங்கள் 16ஆம் பக்கல் 29-1-2006 ஞாயிற்றுக்கிழமை காலை மணி 10.00 முதல் 12.30 வரை, சா ஆலம், சாலை கெலோரா 19/46, பிரிவு 19, தேவான் எம்பிளஸ்ஏ அரங்கத்தில்,

---

| | |
|---|---|
| எண் 11, ஜாலான் அசாகான் சத்து | எண் 36, ஜாலான் SS 5A/5 |
| 26/27ஏ, தாமான் புக்கிட் சாகா, | கிளானா செயா, |
| சா ஆலம், சிலாங்கூர் | பெட்டாலிங் செயா, சிலாங்கூர் |
| **புட்பவதி மணிவெள்ளையன்** | **ச. அம்மாசி, கு. செல்லம்மா** |
| **இணையரின்** | **இணையரின்** |
| திருவளர்செல்வன் | திருவளர்செல்வி |



## இளஞ்சித்திரன் — தமிழ்ச்செல்வி

---

ஆகிய இவர்களின் இனிய தமிழ்த் திருமணம் சான்றோர் உறுதிப்படி, மலேசியத் தமிழ் இலக்கியக் கழகத் தலைவர் தமிழ்த்திரு: மு. மணிவெள்ளையன் அவர்களின் தகைமை சான்ற தலைமையில், திருக்குறள்மணி இராம. மாணிக்கம் அவர்கள் தமிழ்மறையோதி மணவினைச் செய்து வைப்பார். இத்திருமண நிகழ்வுக்குத் தாங்கள் வருகை தந்து இல்லறமேற்கும் நல்லற மணமக்களை வாழ்த்துவதுடன் விருந்தோம்பலிலும் கலந்து சிறப்பிக்கும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

*அவ்வண்ணமே விழையும்,*

| | |
|---|---|
| **புட்பவதி மணிவெள்ளையன்** | **அம்மாசி செல்லம்மா** |
| **வாழ்விணையர்** | **வாழ்விணையர்** |
| உற்றார், உறவினர் மற்றும் கேண்மையர் | தாத்தா, பாட்டிமார், பெரியப்பா, பெரியம்மாமார், சித்தப்பா, சின்னம்மாமார், மாமா, அத்தைமார், மாமா, அக்காள்மார், அண்ணன், அண்ணிமார், தம்பி, தங்கையர் மற்றும் உற்றார் உறவினர். |

"தமிழியத் திருமணம் தகவுடன் போற்றி வையத்துள் வாழ்வாங்கு வாழ்க நெடிதே"

# மணமகள் இல்ல விருந்தோம்பல்

மணவிழா நாளில் அன்றிரவு 7.30 மணிக்கு நிகழும் விருந்தில் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இவ்வண்ணம்,



**ச. அம்மாசி, கு. செல்லம்மா வாழ்விணையர்**

குறிப்பு : பந்தல் கவினமைப்பும் விருந்து வரவேற்பும் கிளானா செயா இளையோர் மகளிர்ப் பிரிவினர்





படிப்பகம்

www.padippakam.com

# சிங்கப்பூர் அமலதாசன் பாடலுக்கு முதல் பரிசு



பாரெங்கும் பவனிவரும் பைந்தமிழுக்குச் சிங்கப்பூரில் சிறப்பிடம். குடியரசில் ஆட்சி மொழி எனும் பெருமையினைப் பெற்றுப் பீடுநடை போடும் வளர் தமிழுக்குச் சிறப்புச் சேர்க்கும் செயலொன்று நடந்துள்ளது. முத்தமிழ்ப் பாடல் ஒன்று முதல் பரிசினைப் பெற்றுத் தமிழ் நெஞ்சங்களைக் களிப்புக் கடலில் ஆழ்த்தியுள்ளது.

தேசிய நிலையில் நடைபெற்ற சிங்கப்பூர்த் தேசியநாள் பாடல் இயற்றும் போட்டியில் தமிழ்ப் பாடலுக்கு முதல் பரிசு கிடைத்துள்ளது. நம் கதை, நம் இணக்கம், நம் பாடல் எனும் கருப்பொருளில் அமைந்த சிங்கப்பூர்ச் சிறப்பைச் சொல்லும் நான்கு மொழிக்குமான தேசிய பாடல் இயற்றும் போட்டி ஒன்றில் மலாய், சீன, ஆங்கிலப் பாடல்களுக்கு ஈடுகொடுத்து ஒரு தமிழ்ப் பாடல் முதல் பரிசினைப் பெற்றிருப்பது இதுவே முதல் முறை என்று பரவசப் படுகிறார் பாடலை இயற்றிய கவிஞரேறு அமலதாசன்.

சிறு வயது முதலே எனக்குத் தமிழார்வம் உண்டு. கவிதையில் மிகுந்த ஈடுபாடு உண்டு. திரைப்படப் பாடல் மெட்டை மட்டும் எடுத்துக்கொண்டு வரிகளை நானே சொந்தமாகப் போட்டுப் பாடி மகிழ்வேன். தேசிய நாள் பாடல் போட்டியில் நான் எழுதிய பாடலுக்குப் பரிசு என்பதைவிட, ஒரு 'தமிழ்ப் பாடலுக்குப் பரிசு' என்பதே என்னைப் பரவசப்படுத்தி மெய்சிலிர்க்க வைக்கிறது என்ற தம்முடைய உணர்வுகளைத் தமிழ்முரசிடம் பகிர்ந்து கொண்டார் கவிஞரேறு அமலதாசன்.

'சிங்கப்பூர் என்று சொல்லும் போதினிலே' என்று தொடங்கும் தேசிய நாள் பாடலுக்குச் சீன, மலாய், ஆங்கில இசைக் கூறுகளை உட்புகுத்தி நன்றாக இசையமைத்து இனிமையாகப் பாடியிருக்கிறார் பிரபல உள்ளூர் இசை அமைப்பாளர் திரு. குணசேகரன். அவருடன் இணைந்து இந்தப் பாடலை உருவாக்கியது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தந்தது. இசை மீது அவர் கொண்டிருக்கும் ஆர்வம் என்னை மலைக்கவும் வைத்தது. வாய்ப்பு வரும்போது இது போன்று நிறையப் பாடல்களை, குறிப்பாக நாட்டுப் பாடல்களை எழுத வேண்டும் என்னும் தம் ஆசையையும் நம்மிடம் பகிர்ந்து கொண்டார் அமலதாசன்.

எழுத்து வடிவில் இருக்கும் பாடல் இசை வடிவம் பெறும்போது அது பிரபலமாகிறது. அது காட்சி வடிவம் பெறும்போது அதற்கு இன்னும் பெருமை கிடைக்கிறது. உள்ளூர் நடனக் கலைஞர் கவிதா கிருஷ்ணன் மிகவும் சிரத்தை எடுத்து ஹெய்க் பெண்கள் பள்ளி மாணவியரை வைத்து நான்கு இனங்களையும் பிரதிபலிக்கும் வகையில் பாடலுக்கு ஏற்ப ஒரு கதம்ப நடனத்தை அமைத்திருந்தார். இந்தப் பாடல் முதல் பரிசாக ஐயாயிரம் வெள்ளி காசோலையையும், வெற்றிக் கோப்பையையும் பெற்றுத் தந்தது. இந்த மகிழ்ச்சி தொடர வேண்டும், தமிழுக்கு மேன்மேலும் சிறப்புச் சேர வேண்டும் என்று சொல்கிறார் கவிஞரேறு அமலதாசன்.

## முதல் பரிசு பெற்ற முத்தமிழ்ப் பாடல் இதோ :

"சிங்கப்பூர்" என்று
சொல்லும் போதினிலே
சிந்தைக்குள் இன்பம்
பொங்கிப் பாயுதே!

எங்கள்பேர் வானின்
எல்லை தாண்டியே
விண்மீன்கள் போன்று
தோகை விரிக்குதே!

எங்கள் வாழ்வும்
எங்கள் வளமும்
ஏற்றம் கொண்டிங்குச்
செழித் தோங்கும்!

திங்கள் போலப்
பரிதி போலச்
சிங்கைத் தீவென்றும்
ஒளிவீசும்!

இது - எங்கள் தாயகம்
எழில் சிந்தும் வாழ்வகம்
இனங்கள் நான்கும்
இணைந்து வாழும்
சிங்கப் பூரகம்!

உரமான கலைகள்
உயிரான மொழிகள்
உறவாடும் அன்புவீடு

திறமான புலமை
திருவான தலைமை
தேனூறும் இன்பநாடு!

எந்நாளும் ஒற்றுமை
இங்கில்லை வேற்றுமை
எல்லார்க்கும் நலங்கள் செய்யும்
சிங்கப் பூரகம்!

பொன்னான வாய்ப்புகள்
புத்தாக்கச் சிந்தனை
பூக்காடாய் மணந்து வெல்லும் –
சிங்கப் பூரகம்!

எத்தனையோ மாற்றம்
அத்தனையும் ஏற்றம்
எல்லாம் நல் ஆக்கம்
சிங்கப் பூரகம்!

முத்தான வழிகள்
முன்னேற்றப் படிகள்
முற்போக்குக் கோட்டம்
சிங்கப் பூரகம்!

சமயத்தில் இணக்கம்
சரிநீதி முழக்கம்
சரியான இயக்கம்
சிங்கப் பூரகம்!

இமயம்போல் வளமை
எண்ணம்போல் நிலைமை
எப்போதும் இளமை
சிங்கப் பூரகம்!

இது - எங்கள் தாயகம்
எழில்சிந்தும் வாழ்வகம்
இனங்கள் நான்கும்
இணைந்து வாழும்
சிங்கப் பூரகம்!

நன்றி : சிங்கப்பூர் தமிழ்முரசு



படிப்பகம்

www.padippakam.com

# சும்மா 'நச்'ன்னு இருக்கு

தமிழ் முரசு

சும்மா 'நச்' ன்னு இருக்கு தமிழ்முரசு. 4 இலட்சம் பிரதிகள் விற்பனை எப்படி? என்று நாம் விசாரித்ததில் கிடைத்த தகவல்கள் :

✣ ஏற்கனவே 7 ஆண்டுகளாக வெளிவந்த இந்நாளிதழை சன் தொலைக்கரட்சி குழுமம் விலைக்கு வாங்கி இருக்கிறது.

✣ 15 ரூபாய் பெறுமானம் உள்ள மத்தாப்பு பெட்டி - 2 ரூபாய் விலையுள்ளதமிழ்முரசு நாளிதழுக்கு இலவசமாகத் தருகிறார்கள்.

✣ தினந்தோறும் டீத்தூள், காபித்தூள், ஷாம்பூ பொட்டலம், முக அழகுக் களிம்பு என ரூ 5 பெறுமான பொருள் இலவசம்.

✣ தமிழ்நாட்டில் வேறெந்த பத்திரிகைக்கும் இப்படி இலவசம் கொடுத்தால் 4 இலட்சம் என்ன 40 லட்சம் விற்பனையாகுமே.

✣ ஏரியா, ரிப்பீட்டு, சின்னத்திரை சினிமா, சீன்மா, ஷாட், டேக், சீக்ரெட் சீனு போன்ற ஆங்கில பக்கத்தலைப்புகள். கோர்ட் தீர்ப்பு, டாக்ரிடம் செக் மோசடி - வக்கீல் கைது, நைட் வாட்ச்மேன் வேலை, டாஸ்மாக்கில் குய்யோ, முய்யோ, ரெட்லைட் - ரொம்பத் தப்பு போன்ற செய்தித் தலைப்புகள் தமிழ்ப் பகை முரசு என்பதை நிரூபிக்கின்றன.

✣ நடிகைகளின் மார்பு, தொப்புள், இடை, தொடை, கன்னம், கண்கள் என மிக அருகே எடுத்த வண்ணப் புகைப்படங்கள் சும்மா 'நச்'சுன்னுதான் இருக்கு.

✣ கோடிக்கணக்கான பண முதலீட்டில் பல பத்திரிகைகளை வாங்கிப் போட்டிருக்கும் சன் குழுமம், தமிழ் நாட்டு வாசகர்களை இன்னும் என்ன செய்யப் போகிறதோ !

✣ பெரிய அளவிலான டெம்மித் தாளை குறுக்காக வெட்டி, நான்காக மடித்து, 20 பக்கம் ஆக்கி உள்ளார்கள்.

✣ வாரப் பத்திரிகைப் பாணியில் இவ்விதழ் செய்திகள் உள்ளனவே தவிர, நாளிதழ் பாணியில் இன்றைய செய்திகளுக்கு முக்கியத்துவம் இல்லாதது பெருங்குறை.

✣ செய்தித் தலைப்புகளும், அச்சிடும் வகையும் மிக நன்று. புதிய நவீன புகைப்படக் கருவியால் எடுக்கப்பட்ட படங்கள் யாவும் கண்ணைக் கவருகின்றன.

✣ இதழ் வடிவாக்கமும் பக்க ஒருங்கிணைப்பும் சிறப்பாக உள்ளன. திராவிட முன்னேற்றக் கழக சார்பு ஏடு என்பதை வலியுறுத்துகின்றன.

✣ குறைகளை சரி செய்தால் தமிழர்கள் கொண்டாடும் சிங்கப்பூர் தமிழ் முரசாக மாறிவிடும் என்பது உண்மை.

# தமிழர் அறநெறிக் கழகத்தின் தமிழ் விழா



மியான்மர் (பர்மா), சன.4– திருவள்ளுவர் ஆண்டு 2037 மார்கழித் திங்கள் 20ஆம் நாள் புதன்கிழமை அன்று பிற்பகல் 1.00 மணிக்கு அண்ணல் காந்தியார் நினைவரங்கத்தில் தமிழர் அறநெறிக் கழகத்தினரால் குழந்தைகள் தமிழ் விழா கொண்டாடப்பட்டது.

மியன்மா இசைக் கலைஞர்களும், மலேசியா இன்னிசைக் குழுவினர்களும் பாட்டன் தமிழில் பண்பாடும் காட்சிகளுடன் தமிழ் முழங்கும் விழா தொடங்கியது.

அண்ணா அறிவாலய மாணவர்கள் தமிழ் வாழ்த்துப் பாடினர். **ஆர். ஏ. செல்வகுமார்** வரவேற்புரை ஆற்றினார். **எஸ்.ஏ.சைலசா, எஸ். பி.எஸ். அகத்தியன்** இருவரும் தமிழ்ப் பாடல்களை ராகத்துடன் பொழிந்தனர்.

தலைமை உரையை **வெ. சண்முகநாதன்** ஆற்றினார். **ஜெ.என்.என்.குணசேகரன் செ. பொம்மி** இணைந்து ஏற்ற இரக்கத்துடன் பாட்டிசைத்தனர்.

இளம் அறிவியல் பட்டதாரியான **ஏ. சந்திரசேகர்** சொற்பொழிவு நிகழ்த்தினார். மேலும் தமிழ்ப்பாடல்களை எழுச்சியுடன் **சே. விசயகுமார், எஸ். வேணு கோபாலன்** பாடினர்.

நிறைவாக தமிழ் மொழி வளர்க்கவும், தமிழர் நலன்பேணவும் அயராது பாடுபடும் இக்கழகத் தலைவர் **கோ. கலைச்செல்வன்** சொற்பொழிவாற்றி தமிழர்களுக்கு புதுத்தெம்பும் எழுச்சியும் பெறச் செய்தார்.

சமூக நீதி காத்த தந்தை பெரியார், ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் கண்ட பேரறிஞர் அண்ணா ஆகிய தமிழனத் தலைவர்களுக்கு நன்றி பாராட்டப்பட்டது.

தமிழ்ப் பரிசளிப்பு விழா சங்கே முழங்கு எனக் கொண்டாட தமிழக, மலேசிய நாட்டு உறவினர்கள் வருகை தந்திருந்தனர். அவர்களுடன் மியன்மாத் தமிழர்கள் சேர்ந்து ஆடிப்பாடி, சுவடி குதூகலித்தனர்.

தமிழ் விழாக்குழுச் செயலாளர் **பெரி.ஞா.கார்த்திகேயன்** அனைவருக்கும் நன்றி நவின்றார்.



படிப்பகம்

www.padippakam.com



# மூன்று குரங்குகள்

## - ஒரு புதிய பார்வை

ஒன்று : 'இன்னா சொல்
கேட்கக் கூடாது' ........ என்று
செவிகளை மூடிக் கொண்டு
கண்களால் பார்த்து மகிழ்ந்தது
வன்முறைக் காட்சிகளை !

இரண்டு : 'தீயனவற்றைப்
பாரக்கக் கூடாது' ... என்று
கண்களை மூடிக் கொண்டு
காதினிக்கக் கேட்டு மகிழ்ந்தது
கோபப் பேச்சுக்களை !

மூன்று : 'கெட்ட வார்த்தைகளைப்
பேசக் கூடாது' ... என்று
வாயை மூடிக் கொண்டு
செவிகளையும் கண்களையும் திறந்து
நிரப்பிக் கொண்டிருந்தது
வன்முறைக் காட்சிகளை
கோபப் பேச்சுக்களை !

ஓ ! ... மகாத்மா ... ! உன்
மூன்று குரங்குகள்... பலே !

இலக்கிய மாமணி -
**பாவலர். கருமலைப் பழம்நீ**
சென்னை - 39.

வான்வழி - கடல்வழி - அஞ்சல் வழி இதழ்
பெறுபவர்கள் அன்புகூர்ந்து எமது
கிராமங்களை எண்ணிப் பார்த்து
கட்டணம், நன்கொடை அளித்து
உதவுங்களேன் !

## சொல் வங்கி - புதிய தமிழ்ச் சொற்கள் :

25-11-2005 அன்று நடைபெற்ற தமிழ் வளர்ச்சித் துறையின் 29 ஆவது சொல் வங்கி கூட்டத்தில் உருவான சொற்கள் :

1. Bracelet - கைச்சங்கிலி
2. Cap ( a kind of Crakrers) - பொட்டுவெடி
3. Electric Charger - மின்னூட்டி
4. Chips - சீவறுவல்
5. Policing - காவலாண்மை
6. Decoction - கொதிவடிநீர்
7. Dress Code - உடை வரைமுறை
8. Fashion Trend - புனைவுப் போக்கு
9. Fiber boat - இழைப் படகு
10. Job Mela - பணிச்சந்தை
11. Letter pad - கடிதத்தாள் சுவடி
12. Letter head - பெயரிய மடல்
13. Medical Transcription - மருத்துவ குறிப்புப் பெயர்ப்பு
14. Microwave oven - நுண்ணலை மின் அடுப்பு
15. Modeling - மாதிரிகை
16. Roll cap - சுருள்பொட்டுவெடி

## மும்பை - தொலைபேசி அழைப்பு

21-12-2005 அன்று மதியம் 3 மணிக்கு நமது தொலைபேசி இலக்கத்தைத் தொட்டு அழைத்தார் திரு. எம். கருண். இவர் மும்பை சர்வதேச விமான நிலையத்தில் அதிகாரியாக கடமையாற்றுகிறார். இந்தியப் பேனா நண்பர்கள் அமைப்பின் வாயிலாக சேவையாற்றுகிறார். இதோ அழைப்பு.

'அய்யா வணக்கம். தொடர்ந்து உங்கள் இதழ் கிடைக்கிறது. படித்துக் கொண்டே இருக்கிறேன். ஒவ்வொரு இதழும் மிகச் சிறப்பாக வருகிறது. சிறு பத்திரிகை உலகில் ஏழைதாசனுக்கு என்று தனி இடம் உருவாக்கி இருக்கிறீர்கள். உலகத் தமிழர்களின் ஆக்கங்கள், செயல்பாடுகள் எல்லாம் கவனத்தை ஈர்க்கின்றன. டிசம்பர் இதழில் தாங்கள் எழுதிய மரண தண்டனை சிறைவாசிகள் சார்பாக எனும் கட்டுரை மிகவும் அருமை. ஆழ்ந்து ரசித்துப் படித்தேன். சிறைவாசிகளுக்காக குரல் கொடுத்திருப்பது. துணிச்சலான செயல். கட்டுரை முடிவில் 'மனித உரிமையை மதிப்போம்! மனித நேயத்தை துதிப்போம்' என்ற வரிகள் அற்புதமானவை. வரலாற்றுப்பூர்வமான கருத்துக்களையும் எடுத்துக் காட்டி இருக்கிறீர்கள் பாராட்டுக்கள் நன்றி வணக்கம்.'



படிப்பகம்

www.padippakam.com

## சிறப்பு மடல்கள்

## உலகப் படைப்பாளர்களை ஒருங்கிணைக்கும் இதழ்

இனிய பண்பாளர் ஏழைதாசன் இதழாசிரியர்
மதிப்புமிகு எஸ். விஜயகுமார் அவர்களுக்கு,
வணக்கம்.

தங்கள் நலம் ஓங்குக.

தாங்கள் தோயாமல் துவளாமல் தீந்தமிழோடு நடத்தி உலகப் படைப்பாளர்களை எல்லாம் தங்கள் இதழ் மூலம் ஒருங்கே இணைக்கும் மகத்தான தொண்டு செய்வதற்காகப் போற்றிப் பாராட்டுகின்றேன். தங்கள் இதழ் தோற்றத்தில் சிறிதானாலும், கருத்தில் மகிழம்பூபோல் மணக்கிறது.

டிசம்பர் - 2005 இதழின் முகப்பில், இந்த எளியவன் உலகத் தமிழ்க் கவிதைப் போட்டியில் முதற்பரிசு பெறும் நிழற்படத்தைச் சீரிய வகையில் வெளியிட்டமைக்கும், பரிசளிப்பு விழாச் செய்தியை ஒரு முழுப் பக்கத்தில் விரிவாக வெளியிட்டு, தங்கள் இலக்கிய வட்டத்திற்குக் கொண்டு சென்றமைக்கும் நெஞ்சார்ந்த நன்றியைக் கூறுகின்றேன்.

ஓங்குக தங்கள் இதழ்ப்பணி!
உயர்ந்திடுக தங்கள் புகழ்க்கொடி!

அன்புடன்,
மயிலாப்பூர்
16-12-05
கா. வேழவேந்தன்
(முன்னாள் அமைச்சர்)

## வான் தமிழ் வள்ளுவர் போல

திரு. எஸ். விஜயகுமார் அவர்கள்
ஏழைதாசன் ஆசிரியருக்கு
வணக்கம் பல.

நண்பரே,

தங்கள் இதழின் பணி மகத்தான தாய்த் தமிழுக்கு அளப்பரிய சிறந்து தொண்டு செய்து வருவதும், 13 ஆண்டுகள் நிறைவு பெற்றும் உள்ளன.

தனியொருவரே தளராத தமிழ்த் தொண்டு செய்வது கண்டு மிக மகிழ்கிறேன்.

புலம் பெயர்ந்த தமிழ்க் கவிஞர்களுக்கு, அறிஞர்களுக்கு தங்கள் இதழே வான் தமிழ் வள்ளுவர் போல வாழ்நாளைச் சிறக்கச் செய்யும் செந்தமிழ்த் தொண்டாகும்.

வியப்பினை தரும் சுறுசுறுப்புக்கும் இளமையின் அறிவு வெளிச்சத்தின் உச்சி தொட்டு நிற்பது பெருமைக்கு உரியதாகும்.

உழைப்புச் செய்து, செய்து மூளையை வளரும் வளர்சிக்கு உதவும் உலக ஏடுகளில் ஒன்று. நீங்களும் சிறப்புற உயர்வீர்களாக.

அன்புடன்,
ஈரோடு -8.
12-12-05
புலவர். மா. பொ. வரதராசன்
(தமிழாசான் ஓய்வு)

## ஆணிவேர் ஏழைதாசன்

அன்புத் தோழர்

ஏழைதாசன் ஆசிரியர் அவர்களுக்கு, வணக்கம்.

உலகத் தமிழ்க் கவிதைப் போட்டி பற்றிய செய்தி யினை ஏழைதாசன் மூலமாகத் தெரிந்துதான் அதில் பங்கெடுத்தேன்.

தற்போது விழாவில் பரிசு பெற்ற செய்தியையும் ஏழைதாசன் வெளியிட்டு பெருமை அளித்து விட்டீர்கள். விழா பற்றிய செய்தியினை படத்துடன் வெளியிட்டு தமிழுக்குப் பெருமை சேர்த்தமைக்கு எத்தனை பாராட்டினாலும் தகும்.

கவிதைத் தொகுப்பு நூலுக்கான அணிந்துரையில் காசி ஆனந்தன் அவர்கள் என்கவிதை வரிகளையே எடுத்து எழுதி பாராட்டி உள்ளார்கள். இதுவே எனக்குப் பெருமைதான்.

இப்பெருமைக்கான ஆணிவேரே ஏழைதாசன் தான். இப்பரிசு உலகத் தமிழர்களின் நோபல் பரிசு. வாழ்நாளில் மீண்டும் கிடைக்கப் போகிறதா ? இதற்காக என் மனமார்ந்த நன்றியினை ஏழைதாசனுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புடன்,
திருமானூர்
14-12-05
டாக்டர். அ. காசிபிச்சை

## ஏழைதாசன் இதழ் உதவி

பேரன்புடையீர்,
வணக்கம்.

ஏழைதாசன் இதழ் உதவியால்தான் நான் இலண்டன் சுடரொளி வெளியீட்டுக் கழகம் நடத்திய 2-வது உலகத் தமிழ்க் கவிதைப் போட்டியில் கலந்து கொண்டேன்.

'புதுயுகத் தமிழர்' என்ற தலைப்பில் நான் எழுதிய கவிதைக்கு ஆறுதல் பரிசு பெறும் வாய்ப்பைப் பெற்றேன் என்பதை மகிழ்ச்சியோடு இதயங்கனிந்த நன்றி உணர்வோடும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

என் நூலைப் பற்றியும் என்னைப் பற்றியும் இனிய தகவல்கள் இதழில் இரண்டு இடங்களில் அளித்து சிறப்பித்துள்ளமைக்கு நன்றி.

சின்னச்சிறு கிராமத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் நான், (வயது 74 ஐ தாண்டி விட்டது) தங்களது அன்பு வழிகாட்டுதலினால், பல்வேறு இலக்கியப் போட்டிகளில் கலந்து கொள்ள வாய்ப்புகள் பெற்று வருகின்றேன்.

உலகளாவிய தங்களது தமிழ்த்தொண்டு தொடர எனது இதயங்கனிந்த நல்வாழ்த்துக்கள்.

அன்புடன்,
உயுத்தப்பள்ளம்
16-12-05
கவியருவி கந்ததாசன் பி.ஏ.



படிப்பகம்

www.padippakam.com



# புத்தாண்டுப் பொங்கல் வாழ்த்து

பூவினிலே மதுபொங்கும்! காதல் பெண்ணின்
புன்னகையில் உளம்பொங்கும்! சந்தம் சிந்தும்
பாவினிலே புலவர்தம் திறமை பொங்கும்!
பண்புளத்தால் சீர்பொங்கும்! போற்றும் நல்லோர்
நாவினிலே அறம்பொங்கும் ! நன்மை பொங்கும்!
நற்றொண்டால் புகழ்பொங்கும்! தமிழைப் போன்று
காவினிலே மணம்பொங்கும்! உங்கள் வாழ்வில்
கவிஞன்யான் உரைத்தவை பொங்க வேண்டும்!

ஊற்றினிலே நீர்பொங்கும்! உழவர் தொண்டால்
உலகுயிரின் உலைபொங்கும்! வற்றா (து) ஓடும்
ஆற்றினிலே வளம்பொங்கும்! தவத்தோர் நெஞ்சுள்
அருள்பொங்கும்! அறிவுபொங்கும்! அன்பு பொங்கும்!
நாற்றினிலே கண்குளிரப் பசுமை பொங்கும்!
நற்கொடியாள் அரவணைக்கக் களத்து மேட்டுக்
காற்றினிலே ஆசைபொங்கும்! உங்கள் வாழ்வில்
கவிஞன்யான் உரைத்தவை பொங்க வேண்டும்!

பாவலர்தம் உள்ளத்துள் அல்லும் பகலும்
பண்ணொளிரும் தமிழ்பொங்கும்! நாட்டு எல்லைக்
காவலர்தம் தோள்களிலே வீரம் பொங்கும்!
கருணையொளிர் குருமொழியால் அமைதி பொங்கும்!
நாவலர்தம் நாவினிலே உரிமை பொங்கும்!
நல்லறத்தால் நலம்பொங்கும்! இன்பம் பொங்கும்!
ஆவலர்தம் உணர்வுபொங்கும்! உங்கள் வாழ்வில்
கவிஞன்யான் அறைந்தவை பொங்க வேண்டும்!

சுடர்விட்டே இறைஞானம் பொங்கும்! நன்றே
தூயவர்தம் நட்புபொங்கும்! கற்றோர் சொந்த
இடம்விட்டே புலம்பெயர்ந்து வாழும் போதும்
இன்மதியால் அவருற்ற சிறப்பு பொங்கும்!
உடல்விட்டே அகலாமல் கவசம் போன்றே
உயிர்செய்த நற்றருமம் பொங்கும்! என்றும்
கடல்மட்டும் பொங்க வேண்டாம்! காக்கும் தேவே!
கவிஞன்யான் உரைத்தவை பொங்க வேண்டும்!

கவிஞர்: கி. பாரதிதாசன், கம்பன் கழகம், பிரான்ஸ்.

## பொன்னண்ணா



'வீழ்வது நாமாகவும் இருக்கலாம்; வாழ்வது தமிழாகவே இருக்கட்டும்' என்ற இலட்சிய வரிகளோடும் 'தமிழால் ஒன்றிணைவோம்; தமிழர்க்கோர் நாடு செய்வோம்' என்ற குறிக்கோளோடும் குளிர்நாடான டென்மார்க்கில் இலக்கியப் பணி ஆற்றுபவர் வேலணையூர் பொன்னண்ணா. இவரது 'அருளமுதம்' என்னும் நூலை 6-8-2005 அன்று கொழும்புத் தமிழ்ச் சங்க மண்டபத்தில் இலங்கை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கா. பொ. இரத்தினம் அவர்கள் தலைமையில் வெளியிட்டுள்ளார். "இளைப்புற்ற நிலையிலும் சிறுசிறு சுகவீனம் முகம் காட்டி சென்றாலும் எனது தமிழ்ப் பணியை உங்களைப் போன்ற நல் உள்ளங்களோடு தொடர்ந்து தொடர்வேன்" என்கிறார் கவிஞர். உலகத் தமிழ் எழுத்தாளர் சங்கத்திலும், சர்வதேச புலம்பெயர் எழுத்தாளர் ஒன்றியத்திலும் அங்கம் வகிக்கின்றார்.

செய்தி



படிப்பகம்

www.padippakam.com



இலண்டன் சுடரொளி சிறப்பு மலரை **வா.மு.சே.திருவள்ளுவர்** வெளியிடுகிறார். மருத்துவர் **கோணேஸ்வரி ஞானச்செல்வன்** பெற்றுக் கொள்கிறார். உடன் சுடரொளி காப்பாளர் மருத்துவர் **எஸ். ஞானச்செல்வன்**, ஈழத்து உணர்ச்சிக் கவிஞர் **காசி ஆனந்தன்**.

# உலகத் தமிழ்க் கவிதைப் போட்டி பரிசளிப்பு விழா

## காப்பாளர் டாக்டர். ஞானச்செல்வன் தலைமை உரை

இலண்டன் சுடரொளி வெளியீட்டுக் கழகத்தினால் நடத்தப்படும் புதுயுகத் தமிழர் கவிதைப் போட்டியில் வெற்றி பெற்ற பெருமை தரும் கவிஞர்களைக் கௌரவித்துப் பொற்கிழியும் சான்றிதழும் வழங்கும் இந்த விழாவிற்கு ஆர்வத்துடன் வந்திருக்கும் பெரியோர்களே ! பேராசிரியர்களே ! எழுத்தாளர்களே ! உங்கள் எல்லோருக்கும் எமது வணக்கம்.

இவ்விழாவிற்கு வருகை தந்திருக்கும் கவிஞர்கள் எல்லோரையும் வருக, வருக என வரவேற்று, வாழ்க, வாழ்க என வாழ்த்தி, வரவேற்பதில் நாம் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறோம். இன்றைய விழாவின் வேந்தர்கள் இங்கு கூடியுள்ள கவிஞர்கள்தான். உலகெல்லாம் தமிழ் ஆராய்ச்சி மாநாடுகள் நடைபெற அஸ்திவாரம் இட்ட வரணபிதா தனிநாயகம் அடிகளார் அரங்கில் இவ்விழா நடைபெறுவது மேலும் பெருமை தருவதாகும்.

தமிழர்களின் தாயகத்தில் நடைபெறும் பெருமை மிக்க இந்த விழாவிற்குத் தலைமை தாங்க எனக்குக் கிடைத்த இந்தச் சந்தர்ப்பம் எனக்கு மகிழ்ச்சித் தருவதாகும். நான் ஈழத்தில் பிறந்தவன். அரசியல் சூழ்நிலையால் சொந்த மண்ணைவிட்டு 5000-ம் மைல்களுக்கு அப்பால் உள்ள பிரித்தானியாவில் வாழ வேண்டியவனானேன்.

மொழியால், மதத்தால் இனத்தால், வாழ்க்கை முறையால், சம்பிரதாயத்தால், சடங்கு முறைகளினால் மாறுபட்ட ஒரு நாட்டில் வாழும் என்னை, உங்கள் முன்னர் நிறுத்தி இருப்பது தேமதுரத் தமிழ்தான். அதை மறுப்பதற்கில்லை. தமிழ் மொழி இருக்கும் வரையில் இந்தப் பாசமும் இருக்கும்.

உலக நாடுகளில் வாழும் தமிழ் மக்களை ஒன்றிணைக்கும் சக்தி கவிஞர்களாகிய உங்களிடம் இருப்பதைக் காண்கிறேன். அதற்கு இந்த விழாதான் சாட்சி. அமைச்சராக இருந்த ஒருவர் பாவேந்தர் கா. வேழவேந்தன் அவர்களே கவிக்களம் இறங்கி தமிழுக்கு தமது கவிதை மூலம் ஒரு உற்சாகத்தை ஏற்படுத்தி உள்ளார் என்பதை பெருமையாக கூறுகிறேன். இந்த உணர்வை முன்னெடுத்துச் செல்ல வேண்டிய கடமை கவிஞர்களைச் சார்ந்ததே.

### "என்னை உங்கள் முன்னர் நிறுத்தி இருப்பது தேமதுரத் தமிழ்தான்"

இலண்டன் சுடரொளி வெளியீட்டுக் கழகம் இது வரையில் இரண்டு உலகளாவிய ரீதியிலான கவிதைப் போட்டிகளை நடத்தியுள்ளது. இந்த இரண்டு போட்டிகளிலும் நாம் எதிர்பார்க்காத அளவு வெற்றி கிடைத்துள்ளது. 216 கவிதைகளை முதலில் கண்ட எமது கழகம் இரண்டாவது போட்டியில் 426 கவிதைகளைக் கண்டு வியப்படைந்தது . இந்தியா, இலங்கையைவிட சிங்கப்பூர், மலேசியா, கனடா, யேர்மனி, நோர்வே உட்பட மற்றும் பல நாடுகளில் இருந்தும் கவிஞர்கள் கலந்து கொண்டிருப்பது எமக்கு ஊக்கம் தந்துள்ளது.

இப்போட்டியில் கலந்து கொள்ளும் கவிஞர்களுடைய கவிதைகளும், அதற்கு உரியவர்களின் பெயர்களும் உலகின் பல நாடுகளிலும் அறிமுகமாகி வருவது குறிப்பிடத்தக்கதாகும். ஒரு நாட்டுக் கவிஞர் ஒருவர் மற்ற நாட்டுக் கவிஞருக்கு அறிமுகமாவது இதுவே முதல் தடவையாகும். இது ஒரு சாதனையாகும். அத்துடன் எமது சஞ்சிகையான சுடரொளி உலகின் பல நாடுகளிலும் விநியோகமாவது பக்கபலமாக உள்ளது. கவிஞர் உலகை வலம் வந்து கொண்டிருக்கிறது. இவை எல்லாம் கவிஞர்களுக்கு பெருமை தரும் அம்சங்களாகும்.

எதிர்வரும் போட்டிகள் இன்னும் வரிவான முறையில் நடைபெறும் எனக் கூற விரும்புகிறேன். அடுத்தப் போட்டி எப்போது ஆரம்பமாகும் என இப்போதே கேட்கும் கடிதங்கள் வர ஆரம்பித்து விட்டன.



படிப்பகம்

www.padippakam.com

கவித்திறன் உடையவர்கள், மக்களினால் பாராட்டப்பட்டவர்கள். கௌரவிக்கப்பட்டவர்கள் பரிசு பெறுகிறார்கள். நிதி, நடுநிலை, கட்டுப்பாடு என்பவற்றின் அடிப்படையில் தெரிவுகள் நடை பெற்றிருப்பதற்கு இந்த ஒன்றே போதுமானது.

தமிழர்களுடைய எதிர்காலம் பற்றிய கட்டாயம் தமிழர்களாகிய எல்லோருக்கும் ஏற்பட்டிருப்பதைக் காண்கிறோம். உலகில் வாழும் எல்லா இனங்களும் தனது எதிர்காலம் பற்றிச் சிந்திக்க ஆரம்பித்துள்ளன. நாமும் எம்மைப் பற்றிச் சிந்திக்காவிட்டால் பின் தங்கி விடுவோம். உலகமெல்லாம் தமிழ் ஒலிக்க வேண்டும் என்ற பாரதியின் கனவை நனவாக்க பாரதி வழி வந்த கவிஞர்களாகிய நீங்கள்தான் இன்று முன்வர வேண்டும்.



'புதுயுகத் தமிழர்கள்' நூலை வெளியிடுகிறார் ஈழத்து உணர்ச்சிக் கவிஞர் **காசி ஆனந்தன்**. முதற்படி பெறுகிறார் முன்னாள் சட்டப் பேரவைத் தலைவர் **க. இராசாராம்**. உடன் **பொன். பாலசுந்தரம்**, உழைப்பு செம்மல் **இரா. மதிவாணன்**, கவிஞர் **இரா. இரவி**, முனைவர் **இரா. மோகன்**, **டி.கே.எஸ். கலைவாணன்**.

இக் கவிதைப் போட்டி மூலம் நாம் ஒரு உலக இணைப்புப் பாலத்தை அமைத்துத் தந்திருக்கிறோம்.இது பாரதியின் கனவில் மிதந்து வந்த பிணைப்புப் பாலம். இக்கனவை நனவாக்குவதும் கவிஞர்களாகிய உங்களது எண்ணங்களிலும், சிந்தனைகளிலும், உயிர்த்துடிப்பும் யதார்த்தமும் நிறைந்த கவிதைகளிலும்தான் தங்கியுள்ளது என்பது எமது நம்பிக்கையாகும்.

இக் கவிதைப் போட்டியை வெற்றிகரமாக நடத்த இரவைப் பகலாக்கியும், குடும்ப நலன்களை கவனிக்காமலும், சிரமங்களைப் பாராமலும் உழைத்த பெருமைக்கு உரியவர்கள் இருவர் எம்முடன் இங்கிருக்கிறார்கள். அவர்களைப் பற்றிக் கூற வேண்டியது எமது கடமையாகும். நான் மட்டுமல்ல இப்போட்டியில் கலந்துகொண்ட, இவ்விழாவை சிறப்பாக நடத்த உதவிய ஒவ்வொருவர் சார்பிலும் இந்த இருவருக்கும் நன்றி தெரிவிக்கிறேன்.

> "அந்நிய மண்ணில் இருந்தாலும் தமிழ்ப் பற்றையும், தமிழ் உணர்வையும், தமிழ் மண்ணையும் நாங்கள் மறக்கவில்லை"

இலண்டன் சுடரொளி வெளியீட்டுக் கழகத்தின் தலைவர் பொன். பாலசுந்தரம் அவர்கள் மற்றவர் செயலாளர். ஐ.தி.சம்பந்தன் அவர்கள் இவர்கள் ஆரம்பத்திலிருந்து முடிவு வரையில் கடைப்பிடித்த மிகக் கடுமையான கட்டுப்பாடும், நிபந்தனைகளும் இப்பெரும் வெற்றியை தந்துள்ளது. இவர்களுக்கு எமது பாராட்டுக்கள். மேலும் கவிதைப் போட்டி வெற்றிகரமாக நடைபெறவும், சுடரொளி ஒழுங்காக வெளியிட்டு ஒத்துழைப்பு நல்கிவரும் டாக்டர். எஸ். நவரத்தினம், டாக்டர்.எஸ்.சோமசேகரும் ஆகியோருக்கும் இச்சந்தர்ப்பத்தில் நன்றியைக் கூறிக் கொள்கிறோம்.

தமிழ்நாட்டு ஊடகங்கள், இலங்கை நாட்டு ஊடகங்கள், தேசீய அளவிலான பெரிய பத்திரிகைகள், சிறிய பத்திரிகைகள், பிராந்திய ரீதியிலான பத்திரிகைகள், வார, மாத சஞ்சிகைகள், குறிப்பாக கவிமலர் இணையதளம். போட்டி ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்தே எம்மை ஆதரித்து வந்துள்ளன. இந்த ஆதரவு பற்றி இலண்டனில் நடைபெற்ற கூட்டங்களில் எடுத்துக்கூற உற்சாகப்படுத்தின. இந்த அபரிதமான ஆதரவுக்கு நன்றி. தொடர்ந்து ஆதரியுங்கள் எனக் கேட்டுக்கொள்கிறேன்.



முன்னாள் அமைச்சர் கவிவேந்தர் **கா. வேழவேந்தனுக்கு** இலண்டன் டாக்டர். **எஸ். நவரத்தினம்** பரிசு வழங்கி சிறப்பிக்கிறார். உடன் **இரா. மதிவாணன்**, சுடரொளி செயலாளர் **ஐ.தி சம்பந்தன் வா.மு.சே. திருவள்ளுவர்**, சுடரொளி தலைவர் **பொன். பாலசுந்தரம்**, முனைவர் **அவ்வை நடராசன்** மலேசியா பெருங் கவிஞர் **தீப்பொறி பொன்னுச்சாமி.**

நான் ஆரம்பத்தில் கூறியது போல் இனத்தால், மொழியால், பண்பாட்டால், மாறுபட்ட ஒரு அந்நிய மண்ணில் இருந்தாலும் தமிழ்ப் பற்றையும், தமிழ் உணர்வையும், தமிழ் மண்ணையும் நாங்கள் மறக்கவில்லை. அதற்கு இந்த விழா திருவண்ணாமலைத் தீபமாக ஒளி தருகிறது.

வாழ்க தமிழ் ! வளர்க தமிழர்கள்! மலர்க கவிஞர்கள் !



படிப்பகம்

www.padippakam.com

# திருத்தொண்டு அம்மா



அமெரிக்கா, அய்ரோப்பா
கனடா அடங்கலுமே
வானலை ஊடாய்
தன் குரலால்
முத்தமிழோடு
முகமலரப் பேசி
ஈழத்து சுந்தரம்பாளாய்
பல்லாயிரம் நேயர்களின்
இதயத்தில் வாசம் செய்யும்
பத்மாவதி சிவரட்ணம்
கடல் கடந்த நாட்டிலிருந்து
கலங்கும் நம் இதயங்களுக்கு
ஓர் கலங்கரை விளக்கம்.

திருத்தொண்டே
தன் உயிர்த்தொண்டாய்
நித்தம் பணிபுரியும் அவருக்கு
ரொறன்டோ துர்க்கை அம்மன் ஆலய
பிரதம குருக்களின் ஆசியோடு
அவர்தம் பணியை மெச்சித்
திருத்தொண்டர் பட்டம் அளித்துக்
கௌரவித்ததை அறிந்து மனமகிழ்ந்து

அந்த உத்தமியாம் அன்னைக்குக்
கிடைத்த அப்பட்டம்
தமிழர் எமக்கெல்லாம்
பெருமையெனக் கூறுவதோடு
அவர் சொல்லவரும் விடயத்தை
தன் இனிய குரலில் சங்கீதமாகவே
பண்ணோடு பாடும் பண்பை
நான் வேறு எவரிடத்திலும்
கண்டிலேன்.

அம்மாவென நான் அன்போடு
அழைத்து மகிழும்
சிவரத்தினம் அம்மாவே,
அன்னைத் தமிழில்
அரிய பல செய்தி தந்து
திருத்தொண்டால்
மென்மேலும் சிறப்புற்று
அனைத்துலகும்
உங்கள் புகழ் நின்று நிலைக்க
நெடுங்கேணி ஊர்
சிற்றர் குடும்பத்தாரின்
இதய நல் வாழ்த்துக்கள் !
வாழ்க வளமுடன்
வாழிய பல்லாண்டு !

நன்றியோடு ...
அன்னை மண்ணையும் மக்களையும் நேசிக்கும்
உங்களில் ஒருவரான நெடுங்கேணிஊர் சிற்றர்

- **இரஜகை நிலவன், துபாய்.**
  *எங்கும் ஒளியேற்றும்*
  *மஞ்சளாய் விடிவானம்*
  *புதிதாக ஒரு அதிகாலை !*

- **பொன்னண்ணா, டென்மார்க்.**
  *பொல்லாத போலிகள்*
  *புனிதர்கள் ஆடைக்குள்*
  *ஸ்ரீலங்கா இனவாத அரசியல் !*

- **பாரீசு பார்த்தசாரதி, பிரான்சு.**
  *என் கண்ணீரிலும்*
  *வியர்வைத் துளிகள்*
  *உன் நினைவுகளின் சூடு அப்படி !*

- **கி. இராஜகுமாரி, செய்யாறு.**
  *ஆற்றில் கலக்கும்*
  *சாக்கடை நீர்*
  *காரைா !*

- **அஸ்லம்பாஷா, ஆம்பூர்.**
  *எப்போதும் தோல்விதான்*
  *பொது மக்களுக்கு*
  *தேர்தல் !*

- **சிவராச செல்வகுமார், பேராவூரணி.**
  *பெருகும் தொழிற்சாலைகள்*
  *கடைகளில் கிடைக்கும்*
  *சுவாசக்காற்று !*

- **சு. கவிணேஷ், சென்னை - 42.**
  *இல்லசத்திற்கு அலையும் மக்கள்*
  *விற்றுத் தீரும்*
  *மாலை நாளிதழ் !*

- **சு.பொன்னியின் செல்வன், அம்மன்பேட்டை.**
  *பொறாமை, தன்னலம்*
  *ஒரே முகமூடி*
  *பச்சைச் சிரிப்பு !*

- **செ. க. செகதீசன், மேலகிருஷ்ணன் புதூர்.**
  *நாட்டு வெடிகுண்டு*
  *அச்சுறுத்தும்*
  *பயங்கரவாதம் !*

- **கவிஞர் மு. வாணி, ஆற்காடு, காஞ்சீபுரம்.**
  *ஒரே உறையில்*
  *இரண்டு கத்திகள்*
  *மாமியார் — மருமகள் !*

## புத்தாண்டுத் துளிகள்



படிப்பகம்

www.padippakam.com

# 'உலகத் தாய்மொழி' ஒலிப் பேழை வெளியீட்டு விழா

உலகமெல்லாம் தமிழ் பரப்பும் உயரிய நோக்கத்துடன் உருவாக்கப்பட்ட 'உலகத் தாய்மொழி' என்ற தமிழ் மொழி, இன, நாட்டுப் பெருமைகளைப் பறைசாற்றும் இசைப் பாடல்கள் அடங்கிய ஒலிப் பேழையினை உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ. நெடுமாறன் வெளியிட்டார். திரைப்பட நடிகர் செந்தில் அதனைப் பெற்றுக்கொண்டார்.

உலகத் தமிழ்க் கழகத்தின் பெங்களூர் கிளை தயாரித்துள்ள இவ் ஒலிப்பேழையின் வெளியீட்டு விழா, சென்னை பத்திரிகையாளர் மன்றத்தில் 28-11-2005 அன்று நடைபெற்றது.

பிரபல பின்னணிப் பாடகர் **பி.பி. ஸ்ரீனிவாஸ்**, எழுகதிர் இதழாளர் **அரு. கோபாலன்**, மலேசியக் கவிஞர் **ஐ. உலகநாதன்**, உலகத் தமிழ்க் கழகத்தினுடைய பெங்களூர் கிளையின் காப்பாளர் **த. வெற்றியாளன்**, உலகத் தமிழ் மையத்தின் நிறுவனர் **இரா. மதிவாணன்**, உலகத் தமிழ் மையத்தின் துணைச் செயலாளர் நெல்லை **இராமச்சந்திரன்**, உலகத் தமிழ்க் கழகத்தின் பொறுப்பாளர், **சி.பு. மணி** மற்றும் இசையமைப்பாளர் **பா. பலராம்** ஆகியோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

'உலகத் தாய்மொழி' ஒலிப்பேழையில் ஏழு இசைப்பாடல்கள் உள்ளன. 'உலகின் முதல் நிலம்,' 'இன்பத் தமிழ்மொழி,' 'தமிழ் என்னும் சொல்லைச் சொல்ல,' 'பாலைக் குடிப்போம்' போன்ற அருமையான பாடல்களை **பா. பலராம், அஜய் வாரியார், ஜாய்ஸ்ரீ, விஷ்ணு** ஆகிய இசைவாணர்கள் இன்பம் ததும்ப பாடியுள்ளனர்.

'உலகத் தாய்மொழி' ஒலிப்பேழையானது, பெங்களூர் உலகத் தமிழ்க் கழகத்தின் பொறுப்பாளர் த. வெற்றியாளனின் பத்தாண்டுக்கால மொழி ஆய்வின் வெளிப்பாடாகும். எளிய நடையில் அதனைப் பாடல்களாக வடித்தவர் மலேசியக் கவிஞர் ஐ. உலகநாதன் ஆவார். ஏழு சுரங்களைக் குறிப்பதாக ஏழு பாடல்களுக்கும் இசை வண்ணம் சேர்த்தவர் இசைத் தென்றல் பா. பலராம்.

இந்த ஒலிப்பேழை ஒலி நாடாவாகவும், குறுந்தகடாகவும் வெளியிடப்பட்டுள்ளது. ஒலிநாடாவின் விலை ரூ.40. குறுந்தகட்டின் விலை ரூ.70 ஆகும்.

"உலகின் முதல் நிலம் கடல்கோளில் அழிந்து போன குமரிக் கண்டம். உலகின் முதல் மாந்தன் தமிழன். உலகின் முதல் மொழி தமிழ்" என்று அறிஞர்கள் பலரும் சான்றுகள் காட்டி நிறுவியுள்ளனர். எனினும் இவற்றைக் கற்றறிந்தோர் மட்டுமே அறிந்துள்ளனர். இந்நிலையினை மாற்றி, இக்கருத்துகள் எளிய மக்களையும் சென்றடைய வேண்டும் என்னும் நோக்கத்துடன் இந்த ஒலிப்பேழையினை 'உலகத் தாய்மொழி' என்று பெயரிட்டு உலகத் தமிழ்க் கழகத்தின் சார்பில் வெளியிட்டுள்ளோம்" என்று தெரிவித்த வெற்றியாளன், உலகம் முழுவதும் தமிழர்கள் இதனைப் பாடிப் பரப்பிடவேண்டும் என்ற வேண்டுகோளையும் விடுத்தார்.

# டாக்டர். மாசிலாமணியின் மகத்துவம்



சவுதி அரேபியா நாட்டில் ரியாத்தில் மன்னர் சவுத் பல்கலைக் கழகத்தில் வேதியியல் பேராசிரியராகப் பணியாற்றி வரும் இந்திய விஞ்ஞானி டாக்டர். வ. மாசிலாமணி அவர்கள் புற்றுநோய் மருத்துவத்தில் மகத்தான சாதனை படைத்து வருகிறார். அவர் சனவரி - 3 முதல் 13 வரை திருச்சி சிங்காரத் தோப்பில் உள்ள டாக்டர் ஜி. விசுவநாதன் மருத்துவமனையில் (போன் : 3091014) இந்தியாவிலேயே முதல் முறையாக அதிநவீன லேசர் முறையில் இலவசப் புற்றுநோய் கண்டறியும் முகாமை நடத்துகிறார். அவரது முகாம் வெற்றி பெறவும் நோயாளிகள் பயனுறவும் ஏழைதாசன் திங்கள் ஏடு வாழ்த்துகிறது.



படிப்பகம்

www.padippakam.com

அட்டைப் படக் கட்டுரை

# இலங்கையின் தடைசெய்யப்பட்ட சஞ்சிகையாளர்! அய்ரோப்பாவின் முதலாவது தமிழ்ப் பத்திரிகையாளர் !



இலங்கை வடமாகாணம் யாழ்ப்பாணத்தில் உள்ள திருநெல்வேலியில் பிறந்தவர் இலண்டன் தமிழினி மஞ்சரி ஆசிரியர் வ.மா. குலேந்திரன்.
இவர் 1966 ஆம் ஆண்டு எழுத்துலகில் பிரவேசித்தார். இவரது முதல் சிறுகதை 'ஜோதி' பத்திரிகையில் பிரசுரமானது.
1973 இல் இலங்கை இலக்கியப் பேரவையை ஸ்தாபித்து தலைவராக விளங்கினார்.
1974 இல் அகில இலங்கை ரீதியில் பரத நாட்டியப் போட்டியை நடாத்தினார்.
'விகடன்' என்ற மாத இலக்கிய சஞ்சிகை, 'செய்தி முரசு' வாரப் பத்திரிகையை நடாத்தி வந்தார். விகடன் சஞ்சிகை சிறீலங்கா அரசினால் தடை செய்யப்பட்ட முதல் சஞ்சிகையாகும்.
'தந்தை செல்வா' என்ற நூலை 1977 இல் வெளியிட்டார்.
1984 இல் அய்ரோப்பாவில் முதலாவது தமிழ்ப் பத்திரிகையை ஆரம்பித்து நடாத்தினார். இதுவே முதலாவது தமிழ்ப் பத்திரிகையாகும்.
இவரது 'லண்டன் மாலை' முதலாவது தமிழ் மாலைத் தினசரியாகும். இவ்வாறு அய்ரோப்பிய நகரில் தமிழ்ப் பத்திரிகை தோன்றக் காரணமாக இருந்ததால் அய்ரோப்பாவில் தமிழ்ப் பத்திரிகை உலகின் தந்தை என அழைக்கப்படுகிறார்.
இவர் 'தமிழினி' மாத இதழையும், 'தமிழினி மஞ்சரி' மாத சஞ்சிகையையும் நடாத்தினார்.
உலகத் தமிழர் பேரமைப்பு அங்குரார்ப்பணக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய ஒரே ஒரு வெளிநாட்டுத் தமிழர் இவர் ஆவார்.
'கடல் அனர்த்தம்,' 'அகராதிக் கவிதைகள்,' 'இலங்கை தமிழ் - முஸ்லீம் அறிஞர்கள்' என்ற நூல்கள் இவரது படைப்பாகும்.
முதலாவது உலகத் தமிழர் பேரமைப்பு மாநாட்டில் இவர் ஆற்றிய உரை தமிழக மக்களின் உணர்ச்சிகளைத் தூண்டி விட்டது.
தமிழர் தந்தை ஆதித்தனார் நூற்றாண்டு நினைவாக தமிழகத்தில் போட்டி ஒன்றை நடத்தும் இவர் 15-01-2006 இல் சென்னையில் பரிசு பெற்றோருக்கு பரிசளிக்க வருகிறார்.
சிறீலங்காவில் உள்ள வசதி குறைந்த 13 எழுத்தாளர்களின் நூல்களை தனது செலவில் அச்சிட்டு அவர்களுக்கு வழங்கியுள்ளார்.
சிறீலங்காவில் பாடசாலை மாணவர்களுக்கு சுனாமி பற்றிய கட்டுரைப் போட்டியை நடாத்திய இவர், சிறந்த மேடைப் பேச்சாளர், நடிகர், கவிஞர், எழுத்தாளர், வானொலி அறிவிப்பாளர்.
இவர் லண்டனில் குடிவரவு சட்ட அறிஞராக சேவையாற்றுகிறார். இவருக்கு 'தமிழினி' என்ற ஒரே மகள். எம்.எஸ்.சி. பயில்கிறார். மனைவி பெயர் சரோஜினி தேவி.
அன்னாரின் அளப்பரிய தமிழ்ப் பணியை, இதழ்ப் பணியை மட்டற்ற மகிழ்வோடு மனம் திறந்து வாழ்த்துகிறோம்.



படிப்பகம்

www.padippakam.com

# பொங்கிடும் பொங்கல்

வந்தவர்க் கெல்லாம் வாழ்வினைத் தந்தவர்
வாடி வதங்குவதோ ! - அட !
வந்தவர் ஆரியர் வஞ்சித்துவாழ நாம்
வீழ்ந்து மடிவதுவோ !



உத்தமர் போலவே ஊரில் நடிக்கிறார்
உமக்குத் தெரியலையோ ! - ஒரு
பத்தரை மாற்றென பாவனை செய்கிறார்
பார்த்தால் புரியலையோ !



தமிழக உணர்ச்சிக் கவிஞர்
**சிங்கார வேலன்**
நாம் தமிழர் இயக்கம், திருச்சி-2.

குப்பத்தில் ஆடியோர் கோபுரம் ஏறினால்
கொற்றவர் வணங்குவதோ ! - நம்
ஒப்பரும் தமிழின மக்களின் வாழ்வினை
ஒழித்திட இணங்குவதோ !

பாலுக்கு காவலாய் பூனையை வைத்திங்கு
பரிவட்டம் கட்டுவதோ ! - அட !
நாலுக்கும் இரண்டிற்கும் தட்டினை ஏந்தியோர்
நாட்டினை ஆள்வதுவோ !


**ஏழைதாசன்** மலர் 14 - இதழ் 5

எல்லோரும் எல்லாமும்
பெறவேண்டும் - கண்ணதாசன்.
திருவள்ளுவர் ஆண்டு 2037
மார்கழி - தை

**கட்டண விபரம்**

**உள்நாடு (அஞ்சல் வழி)**
ஆண்டுக் கட்டணம் : ரூ. 60/-
வாழ்நாள் கட்டணம் : ரூ. 600/-
புரவலர் நன்கொடை: ரூ. 1000/-

**வெளிநாடு (வான்வழி)**
ஆண்டுக் கட்டணம் : US$ 10/-
வாழ்நாள் கட்டணம் : US$ 100/-
புரவலர் நன்கொடை: US$ 200/-

**விளம்பரக் கட்டணம்**

வெளிநாடு
முழுப்பக்கம் : ரூ. 1000/-
அரைப்பக்கம் : ரூ. 500/-

உள்நாடு
முழுப்பக்கம் : ரூ. 500/-
அரைப்பக்கம் : ரூ. 250/-

**பெயர்** : EALAIDHASON
**வங்கி இலக்கம்** : A/c No. 90259
**முகவரி** : INDIAN BANK,
PUDUKKOTTAI - 622 001.
TAMIL NADU, INDIA




படிப்பகம்

www.padippakam.com

# வாசகர் வட்டம்

மரண தண்டனை சிறைவாசிகளின் சார்பாக.. என்ற கட்டுரை அருமை. ஏழைதாசன் ஆசிரியர் விசயகுமார் அவர்களின் சிந்தனை போற்றுதற்குரியது. சிறைச்சாலை என்பது ஒரு தவச்சாலை ஆகும். கொலை பாதகர்களைச் சீர்திருத்தம் செய்து மன அமைதியோடு சக மனிதர்களாக வாழ அவர்களுக்கு வாழ்வியல் நெறிகளைப் போதிக்க வேண்டும் என்ற கருத்து சிந்தனைக்குரியது. உடனடியாகச் செயல்படுத்த வேண்டயதும் ஆகும். இதே கருத்தினை நான் எழுதிக் கொண்டிருக்கும் 'அர்த்தமுள்ள ஆன்மீகம்' என்ற நூலில் வலியுறுத்தி உள்ளேன்.

**- பட்டுக்கோட்டை சீனிவாசன்,**
செய்யாறு, திருவண்ணாமலை.

கவிவேந்தர் பரிசு பெறும் அட்டைப் படம் எங்களை உற்சாக மூட்டியது. டென்மார்க் குடும்பத்தாரின் புத்தாண்டு வாழ்த்துக்கள் நமக்கு உரம் தந்தது. பத்மாவதி சீவரட்ணம் அன்பு சார்ந்த கட்டுரை பாராட்டுக்குரியது, தேவூர் மணிவாசகனாரின் சீர்கொண்ட சேவை உளமார பாராட்டக் கூடியது தான். சொல்வங்கி சுவை கூட்டியது. எவ்வளவுதான் மனிதன் நாகரீக நடைபோட்டாலும் மரண தண்டனை நிச்சயம் ஏற்புடையது அல்லவே ஆசிரியரின் உள்ளப்பூர்வ வரிகள் நிச்சயம், ஒரு நாள் செயலாகும். நன்றியுள்ள நாய் பற்றிய அறிவு பூர்வமான கவிதை, நன்றி மறந்த மாந்தர்கள் படித்துணர வேண்டிய அற்புதம்.

**- சேர. சச்சிதானந்தன்,**
செய்திமுகவர், நாமக்கல்.

அன்பு விலை கொடுத்து வாங்க முடியாது எனும் சிந்தனையை கொண்ட கட்டுரை நன்று. மரண தண்டனை சிறைவாசிகள் சார்பாக... சீரிய கருத்தை வலியுறுத்திய ஆசிரியர் கட்டுரை வெகு சிறப்பு. பாரீசு பார்த்தசாரதியின் கவிதைகள் துளித்துளி மின்னலாய் எமை ஈர்த்தன. விக்னா பாக்கிய நாதனின் கடுகுக் கவிதைகளில் 'இயந்திரங்களுடன் மக்கள்' கவி யதார்த்தம்.

**- சு. கவிணேஷ்,**
வேளச்சேரி, சென்னை - 42.

பிரத்தியட்ச நிலை சுட்டும் 'அன்பு விலை கொடுத்து' உரத்த சிந்தனையாக வெளியிடப்பட்ட 'தமிழ்நாடா? தமிழ் நடுவா?' மரண தண்டனை ஆகிய கட்டுரைகள், ஆசிரியர் தொகுதி, விதேசியப் படைப்பாளர்களுக்கான சிறப்பு. நிலைத் தகுதி, வித்தியாசமான தொலை பேசி அழைப்புகள் பகுதி, தமிழ் வளர்ச்சிக்கான சேவையின் ஓடு பாதையில் தொடரும் சொல் வங்கி, சிறப்பான கவிதைகள் தேர்வு, இன்னபிற அனைத்திற்கும் அனைவருக்கும் பாராட்டுக்கள்.

**- ஆர். தமிழ்மகன்,**
அங்கலக்குறிச்சி, பொள்ளாச்சி.

'முகம்' உண்மையான முகவரி என்ன? கட்டுரையை வாசித்தேன். முகம் தமிழ் வளர்க்கும் உன்னத சிற்றிதழ். சோதிடத்திற்கு எப்படி முக்கியம் கொடுத்தது ? புரியவில்லை. தோழர், நண்பர், இலக்கிய மாமணி, இளமாறன் பதில் அளிப்பார் என எதிர்பார்க்கிறேன்.

**- கருமலைப் பழம் நீ,**
சென்னை - 39.

ஏழைதாசன் தொடர்ந்து வந்த வண்ணம் உள்ளது. எண்ணத்தில் மகிழ்ச்சியும், இதயத்தில் புத்துணர்ச்சியும் பெருக வைக்கின்றது. அளப்பரிய அற்புதமான செய்திகளை, கருத்துப் பேழைகளை, கவிதை ஓவியங்களைத் தாங்கி வருவது தமிழுக்கு புத்தொளி தருவனவாகும்.

**- கவிஞர். மங்களம் இளம்பரிதி,**
தலைமைச் செயலகம், சென்னை - 9.

'நாய்கள் ஜாக்கிரதை' கவிதை மிகவும் அருமை. ஆழமான கருத்து. ஒரு சிற்றிதழ், உலகம் முழுவதும் உலா வருவது மிகவும் பாராட்டுக்குரியது. தாங்கள் சிறந்த கவிஞர், பத்திரிகை ஆசிரியர் என்பதை உலகம் அறியும் நாள் வெகுதூரமில்லை.

**- கவிஞர் ஞா. நெல்சன்,**
மடத்தச்சம்பாடு, நெல்லை.

ஏழைதாசன் இதழில் இடம்பெறும் படைப்புகள் அனைத்தும் சிந்தனைக்கு விருந்தாகவும், பயனுள்ளவையாகவும் அமைந்துள்ளன. உலகத் தமிழர்களின் ஒருங்கிணைப்புப் பாலமாகத் திகழும் ஏழைதாசனின் ஒப்பற்ற தமிழ்ப்பணி தொடர விழைகிறேன்.

**- கவிஞர். மு. வாணி**
ஆற்காடு, காஞ்சீபுரம்.

## அருமைத் தமிழ் நெஞ்சங்களே !

உங்களுக்கு கிடைக்கப் பெறும் இதழ்களை செம்மையாகப் பயன்படுத்துங்கள். தமிழ் வானொலிகளில், தமிழ் தொலைக்காட்சிகளில் அறிமுகம் செய்யுங்கள். தமிழ் அமைப்புகள், சங்கங்களுக்கு மற்றும் தமிழ் ஆர்வலர்களுக்கு உறவினர்களுக்கு இதழைப் படியயெடுத்து அனுப்பி உதவுங்கள்.


படிப்பகம்

www.padippakam.com


தலைமுறைகள் பெயர் சொல்லும்

தரமான கல்வி

அழியாத
கல்வியின்
ஆலயம்

Ph : 04322 - 236853
Cell : 94431 - 26025

ஸ்ரீ வெங்கடேஸ்வரா

மெட்ரிக். மேல்நிலைப் பள்ளி
திருக்கோகர்ணம்,
புதுக்கோட்டை-2.

தங்கம் மூர்த்தி, M.A., M.Ed.,
முதல்வர் & தாளாளர்








படிப்பகம்

www.padippakam.com

EALAIDHASON * TAMIL MONTHLY * R.N.I. Regd. No. 55308/92
R.C. No. 22449/98 * Registered No. TN/PDK/03/06-08

## திருவனந்தபுரம் தமிழ்ச் சங்கத்தின் பாராட்டு

புதுக்கோட்டையில் இருந்து திரு. எஸ். விஜயகுமார் பொறுப்பில் வெளிவரும் ஏழைதாசன் மாத இதழ் தமிழ் எழுத்தாளர்களை, கவிஞர்களை உருவாக்குகிறது; ஊக்குவிக்கிறது; வளர ஆவன செய்து வருகிறது.

அய்க்கூ - 50, அய்க்கூ - 100, அய்க்கூ - 200 ஆகிய தொகுப்புகளை முன்னர் ஏழைதாசன் இதழில் தந்து வாசகர்களை மகிழ்வித்துள்ளது.

முதல் வரியில் ஒரு காட்சிப் பதிவு, இரண்டாவது வரியில் அதன் விரிவு, மூன்றாவது வரியில் ஒரு அதிர்வு - இதுதான் எளிமையான அய்க்கூ இலக்கணம் என்று தலையங்கத்தில் கூறின திரு. விஜயகுமார், வாழ்க்கையில் 250 கவிஞர்கள் (ஆயுள் தண்டனை, வாழ்நாள் தண்டனை கைதிகள் உட்பட) எழுதிய கவிதைகளை மே 2005 மாத இதழில் அய்க்கூ 250 என்ற கவிதை தொகுப்பாக மலர் செய்துள்ளார்.

மனதில் தங்கி நிற்கும் கவிதைகளை தந்த கவிஞர்களையும், அதனை வெளியிட்ட ஏழைதாசன் இதழ் ஆசிரியர் திரு. எஸ். விஜயகுமார் அவர்களையும் திருவனந்தபுரம் தமிழ்ச்சங்கம் பாராட்டுகிறது.

- **சிவகணேசன்**, 'கேரளத் தமிழ்'

## ஏழைதாசனின் நல்முயற்சி

துளிப்பா - 50, துளிப்பா - 100, துளிப்பா 200 என பல துளிப்பா (ஹைக்கூ) சிறப்பிதழ்களை வெளியிட்ட ஏழைதாசன் திங்களிதழின் ஆசிரியர் தோழர் வெற்றிக்குமரன் (விசயகுமார்) துளிப்பா - 250 என்ற துளிப்பா சிறப்பிதழை (மே - 2005) வெளியிட்டுள்ளார்.

சிற்றிதழ் உலகில் இது ஒரு நல்முயற்சி பாராட்டுக்கள்.

தொடர்புக்கு:
ஏழைதாசன்,
26, அடப்பன்வயல் 8 ஆம் தெரு
புதுக்கோட்டை - 622 002.

- பி. இரெ. அரசெழிலன்,
'நாளை விடியும்'

இதழை இலவசமாக பெறுவது
ஏழைதாசன்
வளர்ச்சியை பாதிக்கும்.

பெறுநர் திரு.

Published, Printed and Owned by S. Vijayakumar
Printed at Ealaidhason Printers, Pudukkottai - 2.
Published from 26, Adappanvayal 8th Street, Pudukkottai - 2, Tamil Nadu, INDIA.
Editor : **S. VIJAYAKUMAR**, B.A., Telephone No. 0091 - 04322 - 226 426.

படிப்பகம்